RESEARCH ARTICLE

DOI: 10.54392/ijot2632

INDIAN JOURNAL OF TAMIL

Asian Research Association

# Rational Thought and Social Reform in the Poetry of Pampatti Siddhar

V. Chandrasekar [a,*], V. Kalaiyarasi [b]

[a] Department of Tamil Language and Translation Studies, Dravidian University, Kuppam, Andhra Pradesh, India
[b] Centre for Publications & Extension Services, Dravidian University, Kuppam, Andhra Pradesh, India
* Corresponding author Email: Chandranpvs002@gmail.com
DOI: https://doi.org/10.54392/ijot2632
Received: 17-03-2026; Revised: 11-07-2026; Accepted: 28-07-2026; Published: 07-08-2026

**Abstract:** Tamil Siddha literature represents not only spiritual experiences and philosophical insights but also a critical engagement with social inequalities, caste divisions, religious differences, superstitions, ritualistic practices, and institutional religious authority prevalent in society. In this context, the songs of Pampatti Siddhar constitute a significant body of thought concerning social reform, rationalism, equality, religious criticism, opposition to caste discrimination, and inner enlightenment. The voice raised against caste divisions promotes the principle of social equality, while the criticism of religious distinctions emphasizes human unity and fraternity. The songs that question the unquestioned authority of the Vedas, Sastras, and Agamas advocate intellectual freedom and rational inquiry. Similarly, the verses that question the perceived power or consciousness attributed to stone idols prioritize human awareness and understanding over external ritual practices. His criticism of false religious practices and pseudo-spiritual teachers further emphasizes that genuine religion should be founded upon ethical conduct and moral values rather than empty ritualism or exploitation. Thus, the thought of Pampatti Siddhar brings together opposition to caste discrimination, rejection of religious divisions, criticism of ritualism, rational inquiry, intellectual freedom, and ethical living as interconnected principles of social reform. His songs challenge established social and religious hierarchies while encouraging individuals to cultivate independent thought, moral awareness, and human dignity. This article examines the rationalist and social reformist ideas expressed in the songs of Pampatti Siddhar. It analyzes his perspectives on caste, religion, ritual practices, superstition, intellectual freedom, and ethical values, demonstrating how his poetry advances a human-centred vision of social equality and reform. The study highlights the continuing relevance of his ideas in discussions of rationalism, social justice, equality, and progressive thought.

**Keywords:** Siddha literature, Caste Discrimination, Pampatti Siddhar, Religious Divisions, Criticism

# பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் பகுத்தறிவும் சமூகச் சீர்திருத்தமும்

வி. சந்திரசேகர் [அ *], வ. கலையரசி [ஆ]

[அ] தமிழ் மற்றும் மொழிபெயர்ப்புத்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம், இந்தியா

[ஆ] பதிப்புத்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், குப்பம், ஆந்திரபிரதேசம், இந்தியா

## முன்னுரை

தமிழ்ச் சித்தர் இலக்கியம் ஆன்மிக அனுபவத்தை மட்டுமன்றி, சமூக வாழ்வில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள், சாதிப் பிரிவினைகள், சமய வேறுபாடுகள், மூடநம்பிக்கைகள், போலியான சடங்குகள், குருத்துவ அதிகாரம் ஆகியவற்றையும் விமர்சன நோக்கில் அணுகியதாகும். இவ்வகையில் பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் சமூகச் சீர்திருத்தச் சிந்தனையையும் பகுத்தறிவு நோக்கையும் வலிமையாக வெளிப்படுத்துகின்றன. மனிதர்களைப் பிறப்பு, சாதி, சமயம் போன்ற அடையாளங்களின் அடிப்படையில் பிரிப்பதை மறுத்து, உண்மை, அறிவு, ஒழுக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை அவர் வலியுறுத்துகிறார்.

## சாதி எதிர்ப்பும் சமத்துவச் சிந்தனையும்

பாம்பாட்டிச் சித்தரின் சமூகச் சிந்தனையில் சாதி எதிர்ப்பு முக்கிய இடத்தைப் பெறுகிறது. சாதியின் அடிப்படையில் மனிதர்களைப் பிரிப்பது சமூக ஒற்றுமைக்கு எதிரானது என்பதை அவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இதனை,

"சாதிப் பிரிவினிலே தீயை மூட்டுவோம்;

சந்தை வெளியினிலே கோலை நாட்டுவோம்."

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன (Ramanathan, 2008). சாதிப் பிரிவினையை அழிக்க வேண்டும் என்ற தீவிரமான எதிர்ப்புணர்வு இவ்வடிகளில் வெளிப்படுகிறது. "தீயை மூட்டுவோம்" என்ற உருவகம் சாதிப் பாகுபாட்டை முற்றிலுமாக அழித்தொழிக்க வேண்டிய புரட்சிகர மனநிலையைச் சுட்டுகிறது. மனிதர்களிடையே செயற்கையாக உருவாக்கப்பட்ட சாதி வேறுபாடுகளை நிராகரித்து, அனைவரும் சமமானவர்கள் என்ற கருத்தை முன்னிறுத்துவது சமூக மனிதநேயத்தின் அடிப்படையாகும்.

## சமய வேறுபாட்டை மறுக்கும் சிந்தனை

சமயத்தின் பெயரால் மனிதர்களிடையே உருவாகும் பிளவுகளையும் பாம்பாட்டிச் சித்தர் விமர்சிக்கிறார். சமய வேறுபாடு மனிதர்களின் இயல்பான உறவைப் பாதிப்பதோடு, சமூக ஒற்றுமைக்கும் தடையாக அமைகிறது.

"சமயபேதம் பலவான சாதி பேதங்கள்

சகத்தோர்க்கே அல்லாது சற் சாதுக்களுக்கோ."

என்ற பாடலடிகள் சமயமும் சாதியும் உருவாக்கும் வேறுபாடுகளைச் சுட்டுகின்றன (Ramanathan, 2008). "சமயபேதம்" மற்றும் "சாதிபேதம்" ஆகிய இரண்டையும் ஒரே தளத்தில் வைத்து விமர்சிப்பதன் மூலம், மனிதர்களிடையே பிளவை உருவாக்கும் அனைத்து செயற்கை வேறுபாடுகளையும் சித்தர் எதிர்க்கிறார் என்பது புலப்படுகிறது.

இவ்வகையில் பாம்பாட்டிச் சித்தரின் சிந்தனை சமய நல்லிணக்கத்தையும் சமூக சமத்துவத்தையும் வலியுறுத்துகிறது. மனிதனின் மதிப்பு அவன் சார்ந்த சமயத்திலோ சாதியிலோ இல்லை; அவனது மனிதத் தன்மையிலேயே உள்ளது என்ற கருத்து இங்கு உள்ளடங்கியுள்ளது.

## வேத-சாஸ்திரங்களின் விமர்சனம்

பாம்பாட்டிச் சித்தரின் பகுத்தறிவுச் சிந்தனையின் மற்றொரு முக்கியக் கூறாக வேதம், சாஸ்திரம், ஆகமம், புராணம் போன்ற நூல்களின் அதிகாரத்தை விமர்சிக்கும் போக்கு காணப்படுகிறது.

"சதுர்வேதம் ஆறுவகைச் சாத்திரம்பல

தந்திரம் புராணங்கலை சாற்றும் ஆகமம்

விதம்விதமானவான வேறு நூல்களும்

வீணான நூல்களே என்று ஆடு பாம்பே!

என்ற பாடலில் பல்வேறு சமய நூல்களின் பெயர்களை வரிசைப்படுத்திய பின்னர், அவற்றை "வீணான நூல்கள்" எனக் குறிப்பிடுகிறார் (Ramanathan, 2008). இதனை அனைத்து நூல்களையும் முற்றிலும் மறுக்கும் கருத்தாக மட்டும் புரிந்துகொள்ளாமல், நூல்களைப் படித்தல், சடங்குகளைப் பின்பற்றுதல் ஆகியவற்றைத் தாண்டி உண்மையான அனுபவ அறிவைப் பெற வேண்டும் என்ற சித்தர் மரபின் விமர்சனப் போக்காகப் புரிந்துகொள்ளலாம்.

வெறும் நூலறிவை அடிப்படையாகக் கொண்ட ஆன்மிகத்தைவிட, அனுபவத்தின் மூலம் உண்மையை உணர்வதே சிறந்தது என்ற கருத்து இங்கு வலுப்பெறுகிறது. இதன் மூலம் பாம்பாட்டிச் சித்தர் அறிவை அதிகாரத்திற்கு உட்பட்ட ஒன் றாகக் கருதாமல், மனிதனின் சுயசிந்தனைக்கும் அனுபவத்திற்கும் உட்பட்ட ஒன்றாகக் கருதுகிறார்.

## உலக வாழ்வும் உள்ளத் தெளிவும்

சித்தர் சிந்தனையில் உலக வாழ்க்கையை முற்றிலும் நிராகரிப்பதைவிட, அதனைப் பற்றிய தெளிவுடன் வாழ்வதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. பாம்பாட்டிச் சித்தரின் பாடலிலும் உள்ளத் தெளிவின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது:

"தேக்கெடுத்தே ஓடும்வானத் தேனை உண்டபின்

தேகபந்தம் கொண்டனம் இத் தேச வாழ்வினை

ஒக்காளமென்று எண்ணிமிகு ஓகையுடன் நீ

உள்ளம் தெளிந்துநின்று ஆடு பாம்பே!"

இப்பாடலில் உலக வாழ்க்கையின் இயல்பையும் உடலின் நிலையையும் உணர்ந்து, உள்ளம் தெளிந்து வாழ வேண்டும் என்ற கருத்து வெளிப்படுகிறது (Ramanathan, 2008). "உள்ளம் தெளிந்துநின்று" என்ற தொடரே பாடலின் மையச் சிந்தனையை எடுத்துரைக்கிறது. வெளிப்புற உலகை மட்டும் சார்ந்து வாழ்வதைவிட, வாழ்க்கையின் உண்மையை உணர்ந்து தெளிவான மனநிலையுடன் வாழ வேண்டும் என்பதே இங்கு வலியுறுத்தப்படுகிறது.

இதனால் பகுத்தறிவு என்பது சமூக நிறுவனங்களை விமர்சிப்பதோடு முடிவடையாமல், தனிமனிதனின் அகத்தெளிவையும் உள்ளடக்கியதாகிறது.

சிலை வழிபாடும் பகுத்தறிவும்

பாம்பாட்டிச் சித்தர் வெளிப்புற வடிவங்களுக்கும் உணர்வு நிலைக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுட்டிக்காட்டுகிறார்:

"உளியிட்ட கற்சிலையில் உண்டோ உணர்ச்சி?

உலகத்தின் மூடர்களுக் குண்டோ உணர்ச்சி?"

இப்பாடலில் கல்லால் உருவாக்கப்பட்ட சிலைக்கு உணர்வு உண்டா என்ற கேள்வியை எழுப்புகிறார் (Ramanathan, 2008). இதன் மூலம் சிலையை மட்டுமே இறைமைக்கான இறுதி வடிவமாகக் கருதி வழிபடுவதைக் கேள்விக்குட்படுத்துகிறார். அதைவிட முக்கியமாக, "உணர்ச்சி" என்ற சொல்லின் வழியாக உயிருள்ள மனிதனின் அறிவுணர்வை முன்னிறுத்துகிறார்.

இங்கு சித்தரின் நோக்கம் வெறும் சிலை மறுப்பு அல்ல; அறிவில்லாத வெளிப்புற வழிபாட்டைக் காட்டிலும் உண்மையை உணரும் உள்ளார்ந்த அறிவு முக்கியமானது என்பதை வலியுறுத்துவதாகக் கொள்ளலாம். எனவே இப்பாடல் சித்தர் மரபின் பகுத்தறிவு மற்றும் அகநோக்கு ஆகிய இரு கூறுகளையும் ஒருங்கிணைக்கிறது.

## போலி மதமும் போலிக் குருவும்

சமூகத்தில் நிலவும் போலியான மதப்போதனைகளையும் குருத்துவ அதிகாரத்தையும் பாம்பாட்டிச் சித்தர் விமர்சிக்கிறார். உண்மையான ஆன்மிகம் மனிதனை நல்வழிப்படுத்த வேண்டும்; அதற்கு மாறாக, அறியாமையைப் பயன்படுத்தி மக்களை வழிநடத்தும் போலிக் குருக்கள் சமூகத்திற்குத் தீங்கு விளைவிப்பவர்கள் என்ற கருத்து அவரது பாடலில் வெளிப்படுகிறது:

"பொய்ம் மதங்கள் போதனை செய் பொய்க் குருக்களைப்

புத்தி சொல்லி நன்னெறியில் போக விடுக்கும்

மெய்ம் மதந்தான் இன்னதென்று மேவ விளம்பும்

மெய்க் குருவின் பதம் போற்றி ஆடுபாம்பே!"

இப்பாடலில் "பொய்ம் மதங்கள்" மற்றும் "பொய்க் குருக்கள்" ஆகியவற்றுக்கு எதிராக "மெய்ம் மதம்" மற்றும் "மெய்க் குரு" ஆகியவை முன்வைக்கப்படுகின்றன. இதன் மூலம் பெயரளவிலான மதத்தைவிட உண்மையான அறவாழ்வும் நன்னெறியும் முக்கியமானவை என்ற கருத்து வலியுறுத்தப்படுகிறது (Venugopal, 2013).

"நன்னெறியில் போக விடுக்கும்" என்ற தொடர் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது. உண்மையான ஆன்மிகத்தின் நோக்கம் மனிதனை அறவழியில் நடத்துவதாக இருக்க வேண்டும். மனிதனைப் பிரிப்பதும், அச்சுறுத்துவதும், அறியாமையில் வைத்திருப்பதும் உண்மையான மதத்தின் பண்புகளாக இருக்க முடியாது. இவ்வகையில் பாம்பாட்டிச் சித்தரின் மத விமர்சனம் மனிதநேயம் மற்றும் சமூக அறநெறியோடு தொடர்புடையதாகிறது.

## சமூகச் சீர்திருத்தமும் மனிதநேயமும்

பாம்பாட்டிச் சித்தரின் மேற்கண்ட பாடல்களை ஒருங்கிணைத்துப் பார்க்கும்போது, அவரது சிந்தனை தனிமனித ஆன்மிக அனுபவத்தைக் கடந்து சமூகச் சீர்திருத்த நோக்குடன் இயங்குவது தெளிவாகிறது. சாதி வேறுபாட்டை எதிர்ப்பது, சமயப் பிரிவினையை மறுப்பது, வேத-சாஸ்திரங்களின் அதிகாரத்தை விமர்சிப்பது, வெளிப்புற வழிபாட்டு முறைகளைக் கேள்விக்குட்படுத்துவது, போலி

மதங்களையும் குருக்களையும் கண்டிப்பது ஆகியவை அனைத்தும் மனிதனின் அறிவுச் சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் முன்னிறுத்துகின்றன (Meyyapan, 2011).

இவ்வாறு பார்க்கும்போது, பாம்பாட்டிச் சித்தரின் பகுத்தறிவு வெறும் அறிவார்ந்த சிந்தனை அல்ல; அது சமூக விடுதலையை நோக்கிய சிந்தனையாகும். மனிதனை அறியாமையிலிருந்தும், சாதி-சமயப் பாகுபாடுகளிலிருந்தும், போலியான ஆன்மிக அதிகாரத்திலிருந்தும் விடுவிப்பதே அவரது சிந்தனையின் அடிப்படை நோக்கமாக அமைகிறது.

## முடிவுரை

பாம்பாட்டிச் சித்தரின் பாடல்கள் சமூகச் சீர்திருத்தம், பகுத்தறிவு, சமத்துவம், சமய விமர்சனம், சாதி எதிர்ப்பு, அகத்தெளிவு ஆகிய பல்வேறு சிந்தனைகளின் தொகுப்பாக விளங்குகின்றன. சாதிப் பிரிவினையை எதிர்த்து எழுப்பப்படும் குரல் சமூக சமத்துவத்தை முன்னிறுத்துகிறது. சமயப் பேதங்களைக் கண்டிக்கும் சிந்தனை மனித ஒருமைப்பாட்டை வலியுறுத்துகிறது. வேதம், சாஸ்திரம், ஆகமம் போன்றவற்றை விமர்சிக்கும் பாடல்கள் அறிவுச் சுதந்திரத்திற்கும் பகுத்தறிவிற்கும் வழிவகுக்கின்றன. அதேபோல், கற்சிலையின் உணர்வைக் கேள்விக்குட்படுத்தும் பாடல் வெளிப்புறச் சடங்குகளைவிட மனிதனின் அறிவுணர்வுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. போலி மதங்களையும் போலிக் குருக்களையும் எதிர்க்கும் பாடல் உண்மையான மதத்தின் அடிப்படை நன்னெறியாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. எனவே, பாம்பாட்டிச் சித்தரின் சிந்தனையில் சாதி எதிர்ப்பு, சமயப் பாகுபாடு எதிர்ப்பு, சடங்கு மறுப்பு, பகுத்தறிவு, அறிவுச் சுதந்திரம், நன்னெறி ஆகியவை ஒன்றோடொன்று இணைந்த சமூகச் சீர்திருத்தக் கருத்துகளாக அமைகின்றன. இச்சிந்தனைகள் மனிதனை மையப்படுத்திய சமத்துவச் சமூகத்தை உருவாக்குவதற்கான அடிப்படை மதிப்புகளாக விளங்குகின்றன.

## References

Meyyapan, S. (2011) Siddhar Thathuva Kalanjiyam, Manivasagar Pathipagam, Chidambaram, India

Ramanathan, A. (2008) Siddhar Literature, Prema Pirasuram, Chennai, India

Venugopal, M. (2013) Pampatti Siddhar Padalkal, Mullai Nilayam, Chennai, India

## Conflict of Interest

The Author's has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

## About the License

© The Author(s) 2026. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License.

## Cite this Article

V. Chandrasekar & V. Kalaiyarasi, Rational Thought and Social Reform in the Poetry of Pampatti Siddhar, Indian Journal of Tamil, 7(3), (2026) 12-15. https://doi.org/10.54392/ijot2632